SC.No. 138/18
PW – 7
11.07.2025
பெயர் : சிதம்பரம்
த/பெ. : ரத்தினம்

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது மனைவி பெயர் தேவகி. எனது வீடு, எதிரிகள் வீடு மற்றும் புகார்தாரர் செல்வம் வீடு அடுத்தடுத்ததாக உள்ளது என்று சொன்னால் சரிதான். எங்கள் வீட்டிற்கு செல்லும் பாதைக்கும் எதிரிகள் மற்றும் புகார்தாரர் வீட்டிற்கு செல்லும் பாதைக்கும் சம்மந்தம் இல்லை. எனது வீட்டிற்கு செல்ல பிரதான சாலை உள்ளது. சந்து பாதை குறித்து பிரச்சனை இருந்த விபரம் எனக்கு தெரியும். பாதை பிரச்சனை குறித்து போலிசார் என்னை விசாரிக்காததால் அது பற்றி நான் கூறவில்லை. எதிரிகள் என் மனைவி மீதும் அருணாசலம் என்பவர் மீதும் பாதை பிரசச்னை சம்மந்தமாக சிவில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர் என்று சொன்னால் சரிதான். என்னுடைய வீட்டு எல்லைக்கு தென்புறமாக உள்ள பாதை சம்மந்தமாக தான் அவர்கள் சிவில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர். 15.06.2013 தேதியில் தான் இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு என்னை விசாரிக்கவில்லை. போலிசாரிடம் நான் ஒரு கையெழுத்து மட்டும் போட்டுக் கொடுத்தேன். சம்பவத்திற்கு பயன்படுத்திய அரிவாளை போலிசார் கைப்பற்றிய விபரத்திற்காக நான் அந்த கையெழுத்தை போட்டுக் கொடுத்தேன். நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் வைத்து போலிசாரிடம் கையெழுத்து போட்டு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையெழுத்து செய்து கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– சிதம்பரம்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.
Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.